**உதவி அமர்வு நீதிமன்றம், மானாமதுரை**

**எஸ்.சி.எண்.12/2022**

**19.01.2024**

**அ.சா.5 (தவசெல்வம்)**

**கு.வி:**

அ.சா.1 எனது மைத்துனர், அ.சா.2 எனது மாமனார், அ.சா.3 எனது மாமியார், அ.சா.4 எனது மைத்துனர் முனீஸ்வரனின் மனைவி, LW 8 செந்தில் குமார் எனது உடன்பிறந்த சகோதரர், LW 9 அய்யாவு எனது தகப்பனார் ஆவார் என்றால் சரிதான். 2020ம் வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஊரில் என்ன வேலை பார்த்தேன் என்றால் விவசாய வேலை பார்த்தேன். அ.சா.1 வீட்டிலிருந்து மாரநாட்டு கால்வாய் 100மீட்டர் தூரம் இருக்கும். அதேபோல் அ.சா.1 வீட்டிலிருந்து வேலாங்குளம் சுடுகாடு எவ்வளவு தூரம் என்றால் அதே தூரம் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் சம்பவ இடம் மாரநாட்டு கால்வாயில் சுடுகாடு அருகே என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் தாலிகுளம் ஆகும். எனக்கு திருமணம் ஆனது முதல் எனது தந்தையுடன் தாலிகுளத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அ.சா.1 வீட்டிற்கும் நான் குடியிருக்கும் தாலிகுளம் வீட்டிற்கும் இடையே 1மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். வழக்கில் குற்றசம்பவம் 10.12.2020 அன்று இரவு 8.30மணிக்கு என்றால் சரிதான். காயம்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 சிவகங்கை அரசு மருத்துவமனையில் 10.12.2020ம் தேதி இரவு 11.05க்கு சிகிச்சைக்கு சேர்ந்ததாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 சிகிச்சைக்கு சேர்ந்ததாக சொல்லப்படும் விபத்து பதிவேட்டில் அ.சா.1 மதுஅருந்தியதாக உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து 2.35மணி நேரம் காலதாமதமாக தான் அரசு மருத்துவமனை சிவகங்கையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால் தெரியாது. அ.சா.1 எனது மைத்துனர் ஆனால் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு நான் அவருடன் போகவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது நான் அ.சா.1 உடன் இல்லை அதனால் தான் மருத்துவமனை சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக எங்கள் குடும்ப உறுப்பினர்கள் தவிர வேறு நபர்கள் யாரும் இல்லை என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கும்

போது அ.சா.1 வீட்டில் நான் இருந்ததாக 161 வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் அ.சா.1 உடன் நான் செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் அ.சா.1 உடன் நான் செல்லவில்லை என்பதால் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் நான் பார்த்திருந்தால் அ.சா.1 தனது முதல் விசாரணையில் அ.சா.5 விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லியிருப்பார் என்றால் சரிதான். ஆனால் அ.சா.1 தனது முதன்மை விசாரணையில் அ.சா.2, 3 மட்டும் தான் சத்தம் கேட்டு ஓடி வந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரண்டு பக்கமும் வீடுகள் இருந்தது என்றால் இல்லை. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் அ.சா1 வீட்டிலிருந்து எவ்வளவு துாரம் என்றால் 30மீ இருக்கும். அ.சா.1 புகார் கொடுத்ததன் அடிப்படையில் தான் அரசு வழக்கு பதிவை செய்துள்ளது என்பது தெரியும். அ.சா.1 மதுரை சரவணா தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தான் அரசு தரப்பில் புகார் அளித்ததாக எனக்கு தெரியும். அ.சா.1 மதுரை சரவணா தனியார் மருத்துவமனையில் 11.12.2020 காலை 9 மணிக்கு தான் சிகிச்சைக்கு சேர்ந்ததாக மேற்படி தனியார் மருத்துவமனை 15.12.2020ம் தேதி வழங்கியுள்ள காயச்சான்றிதழில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 11.12.2020ம் தேதி காலை 9 மணிக்கு மேல் தான் அரசு வழக்கிற்காக புகார்கொடுத்துள்ளார், ஆனால் வழக்கின் முதல் தகவல் அறிக்கை 1நாள் முன்பே 10.12.2020 இரவு 23.30க்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியும். நான் எனது முதல் விசாரணையில் சத்தம் கேட்டு தான் சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சம்பவம் இடம் சென்றதால் நான் சம்பவத்தை நேரில் பார்க்கமுடியாது என்றால் நான் நேரில் பார்த்தேன். என்னுடைய முதல் விசாரணையில் எதிரிகள் 4 பேர் அ.சா.1 யை தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அ.சா.1 தான் சிகிச்சைக்கு சேர்ந்த விபத்து பதிவேட்டில் 5 அடையாளம் தெரிந்த நபர்கள் தன்னை தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 தான் சிகிச்சைக்கு சேர்ந்த விபத்து பதிவேட்டில் எதிரிகளின் பெயரை குறிப்பிடவில்லை என்பது தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அ.சா.1 சிவகங்கை அரசு மருத்துவமனை அதன்பிறகு மதுரை ராஜாஜி மருத்துவமனை அதன்பிறகு மதுரை சரவணா தனியார் மருத்துவமனையில் வழக்கு சம்பந்தமாக சிகிச்சைக்கு சேர்ந்ததாக

அரசு வழக்கு தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியாது. அரசு வழக்கு எ1 எதிரிக்கும் எனது மாமனார் குடும்பத்திற்கும் நிலப்பிரச்சனை மற்றும் இருசக்கர வாகன முன்விரோதம் இருந்ததாக அரசு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாமனாருக்கும் எ1 எதிரிக்கும் இடையே நிலப்பிரச்சனை இருந்ததாக சொல்லப்படும் நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எ1 எதிரியின் பிரச்சனைக்குரிய நிலத்தின் சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். எ1 எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் இடையே பிரச்சனைக்குரிய இருசக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரச்சனைக்குரிய இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகளுக்கும் எங்களது மாமனார் குடும்பத்திற்கும் இடையே எந்த நிலப்பிரச்சனையும் இல்லை என்றும், அதேபோல் எந்த இருசக்கர வாகன பிரச்சனையும் இல்லை என்றும், வழக்கிற்காக போலீசார் கேட்டதன் பேரில் இந்நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா1க்கு மதுரை சரவணா தனியார் மருத்துவமனையில் 15.12.2020ல் வழங்கப்பட்ட காயச்சான்று அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என உள்ளது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 3 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார், ஆனால் நான் சரவணா தனியார் மருத்துவமனையில் இருக்கும் போது சென்று பார்த்தேன். அ.சா.1 சரவணா தனியார் மருத்துவமனையில் 11.12.2020ம் தேதியிலிருந்து 12.12.2020ம் தேதி வரை 1 நாள் மட்டுமே சிகிச்சையில் இருந்ததாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1, 2, 3 ஆகியோர் போலீசாரின் 161(3)ன் கீழான மறுவாக்குமூலத்தில் சம்பவ இடம் இருட்டு என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். டிசம்பர் மாதம் இரவு 8.30 என்றால் இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். போலீசார் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் சம்பவ இடம் அ.சா.1ன் வீட்டிற்கு எதிரே உள்ளது என்றால் சரிதான். போலீசார்தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் அ.சா.1ன் வீட்டில் கழிவறை இருப்பதாக உள்ளது என்றால் இருக்கிறது ஆனால் அது செயல்படவில்லை. கழிவறை உள்ளது ஆனால்அது செயல்பாட்டில் இல்லை என்று எனது போலீசூர் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா் என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தாலிகுளம் ரோடு. T.வேலாங்குளத்திலிருந்து தாலிகுளம் செல்வதற்கு பொதுமக்கள் இந்த பாதையை தான் பயன்படுத்துகிறார்கள் என்றால்

சரிதான். தாலிகுளம் ரோட்டில் பொதுமக்கள் நடமாட்டம் மாலை 6.30மணி வரை இருக்கும். மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லபடும் தாலிகுளம் ரோட்டில்பொதுமக்கள் நடமாட்டம் 10மணி வரை இருக்கும் என்றும் நான் பொய்யாக சொல்கிறென் என்றால்சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் எதிரிகள் வாள் மற்றும் அருவாள்கொண்டு வெட்டினார்கள் என்று சொன்னேன் என்றால் சரிதான். வாள், அருவாள் கொண்டு வெட்டினால் பெரிய காயம் ஏற்படும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சிறுகாயமாக மதுரை சரவணா மருத்துவமனை காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா1 3 மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொல்லப்படும் எந்த சிகிச்சை ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அதுபோல் எதிரிகள் எந்த வழியாக குற்றசாட்டு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வந்தார்கள் எந்த வழியாக குற்றசாட்டு சம்பவத்திற்கு பிறகு சென்றார்கள் என்பது பற்றி எனது முதல் விசாரணையிலோ 161 வாக்குமூலத்திலோ எந்த இடத்திலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், அ.சா.1க்கு எந்த காயமும் எதிரிகளால் ஏற்படவில்லை என்றும், போலீசார் கேட்டதன் பேரில் அவர்கள் பதிவு செய்துவிட்டு பொய்வழக்கில் எதிரிகளை சேர்த்து நடக்காத சம்பவத்திற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா1 சம்பவம் நடந்ததாக சொல்லபடும் சமயத்தில் மதுபோதையில் இருந்து தனது இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து ஏற்பட்ட சிறுகாயத்தின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக போலீசார் கேட்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**